TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064847

1. District : திருவண்ணாமலை PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு திருவண்ணாமலை Year: 2019 FIR No.: 20 Date: 01.11.19
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 24.10.2019 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : 14.00 hrs Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 31.10.2019 Time : 17.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written (typed complaint)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: மாவட்ட கருவூல அலுவலகம், திருவண்ணாமலை.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
வடக்கே 2 kms.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. P.A. இன்பராஜ் (b) Father's/ Husband's Name : திரு. S. பெரியநாயகம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 51/2019 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : வழக்கறிஞர் (g) Address : எண். 26-E, நெல்சன் மண்டேலா தெரு, சாரோன், திருவண்ணாமலை.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. வேல்முருகன், கண்காணிப்பாளர், மாவட்ட கருவூல அலுவலகம், திருவண்ணாமலை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. A. [signature] 1/11/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/11/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.11.2019 at 10.10 hrs.

Name: பெயர் N. DEVANATHAN
Rank: நிலை DSP ……No. எண் ……….

பணிந்து அனுப்பப்படுகிறது:- திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் 31.10.2019-ம் தேதி மாலை 17.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு. P. A. இன்பராஜ், வழக்கறிஞர், த/பெ.S.பெரியநாயகம், எண்.26-E, நெல்சன் மண்டேலா தெரு, சாரோன், திருவண்ணாமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர்: P. A. இன்பராஜ், வழக்கறிஞர், த/பெ. S.பெரியநாயகம், எண்.26-E, நெல்சன் மண்டேலா தெரு, சாரோன், திருவண்ணாமலை. பெறுநர், உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, பொருள்:- ஓய்வூதிய நிலுவைத்தொகை மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற கோப்புகள் சரிபார்த்து பரிந்துரை செய்ய ரூ.3000/- இலஞ்சமாக கேட்ட கண்காணிப்பாளர் திரு.வேல்முருகன் என்பவர் மீது நடவடிக்கை கோருவது சம்மந்தமாக.நான் மேற்கண்ட முகவரியில் என் மனைவி திருமதி. பிரிஸில்லா இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் எனது தாயார் திருமதி.A.மரியசெல்வம் என்பவருடன் வசித்து வருகிறேன். நான் திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பணி செய்து வருகிறேன். எனது தந்தையார் திரு.S.பெரியநாயகம் என்பவர் திருவண்ணாமலை மாவட்ட காவல் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து கடந்த 31.07.1995 ஆம் தேதி பணியிலிருந்து வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றுவிட்டார். அதன் பிறகு ஓய்வூதியம் பெற்று வந்தார். அந்நிலையில் கடந்த 16.05.2019 ஆம் தேதி எனது தந்தையார் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். மேற்படி எனது தந்தையார் இறந்து போனதால் அரசால் வழங்கப்படும் ஓய்வூதிய நிலுவைத் தொகையை பெற்றுத்தரவும், எனது தந்தையார் பெயரிலிருந்த ஓய்வூதியத்தை என் தாயார் பெயருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாற்றி தரவும் நான் கடந்த செப்டம்பர் மாதம் மாவட்ட கருவூல அலுவலகத்திற்கு சென்று ஓய்வூதிப்பிரிவில் எனது தாயாருடைய மனுவை அவர் சார்பாக நான் கொடுத்தேன். அம் மனுவைப்பார்த்து ஓய்வூதியப்பிரிவில் பணிபுரியும் பிரிவு அலுவலர் என் தந்தையாருக்கு கடந்த மே மாதம் வழங்கிய ஓய்வூதிய தொகையை சலான் எடுத்து திரும்ப அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் எனக் கூறினார்கள். நான் கடந்த 12.09.2019 ஆம் தேதி என் தந்தையாரின் மே மாத ஓய்வூதியத் தொகை ரூ.19,500/-ஐ திருவண்ணாமலை பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தி விட்டு சலானை கொண்டு போய் மாவட்ட கருவூல அலுவலகத்தில் ஓய்வூதியப் பிரிவில் சமர்பித்தேன். பின்னர் என் தாயாரின் மனு சம்மந்தமான கோப்புகளை ஓய்வூதியப் பிரிவிலிருந்து குடும்ப ஓய்வூதியப் பிரிவுக்கு அனுப்பி வைத்தார்கள். நான் சுமார் ஒரு வாரம் கழித்து குடும்ப ஓய்வூதிய பிரிவிற்குச் சென்று கண்காணிப்பாளர் திரு. வேல்முருகன் என்பவரை சந்தித்து எனது தாயாரின் குடும்ப ஓய்வூதியம் சம்மந்தமாக கேட்டேன்.

அதற்கு அவர் கோப்புகளை சரிபார்த்து, நிலுவைத்தொகை மற்றும் தாயார் பெயருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாற்றித்தர மேலதிகாரிகளுக்கு பரிந்துரை செய்ய வேண்டும், நிறைய வேலைகள் உள்ளதால் பிறகு வந்த பார்க்குமாறும் கூறி என்னை அனுப்பிவிட்டார். நான் திரும்பவும் கடந்த 24.10.2019 ஆம் தேதி பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட கருவூல அலுவலகத்திற்கு சென்று கண்காணிப்பாளர் திரு.வேல்முருகன் என்பவரை சந்தித்து எனது தாயாரின் மனு குறித்து கேட்டேன். அப்போது அவர் நிலுவைத்தொகை மற்றும் தாயார் பெயருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாற்றித்தர மேலதிகாரிகளுக்கு பரிந்துரை செய்ய தனக்கு இலஞ்சமாக பணம் ரூ.5000/- தர வேண்டும் என கேட்டார். நான் அவரிடம் கொஞ்சம் குறைத்துச் சொல்லுங்கள் என்று கேட்டேன் அதற்கு அவர் மேலதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டியுள்ளதால் குறைக்க முடியாது எனக் கூறினார். நான் திரும்ப கேட்டதற்கு ஏற்கனவே கேட்ட தொகையிலிருந்து ரூ.2000/-ஐ குறைத்து ரூ.3000/- கொடுக்க வேண்டும் என கேட்டார். மேலும் அவர் இதிலிருந்து குறைத்துச் சொல்ல முடியாது ரூ.3000/- கொடுத்தால் தான் மேற்படி கோப்புகளை சரிபார்த்து மேலதிகாரிகளுக்கு பரிந்துரை செய்வேன் எனக் கண்டிப்பாகக் கூறினார்.எனக்கும், எனது தாயாருக்கும் மேற்படி வேலை முடித்து கொடுக்க கண்காணிப்பாளர் திரு.வேல்முருகன் என்பவருக்கு ரூ.3000/- இலஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லை. எனது தாயாருக்கு வயது 78 ஆவதாலும், அவர்களால் அடிக்கடி அலுவலகம் வந்து செல்ல சிரமமாக இருப்பதாலும், நான் என்னிடம் ஓய்வூதிய நிலுவைத்தொகை பெற்று தரவும் என் தந்தையாரின் ஓய்வூதியத்தை என் தாயாரின் பெயரில் குடும்ப ஓய்வூதியமாக மாற்றி தர ரூ.3000/-இலஞ்சமாக கேட்ட திரு. வேல்முருகன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று 31.10.2019 ஆம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் என் தாயார் சார்பாக இந்த மனுவை அளிக்கிறேன். மேற்படி மனுவின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, SD/XXX 31.10.19. (P. A. INBARAJ).

Sir,

Received the complaint on 31.10.2019 at 17.00 hrs and a quick verification on the general reputation of the accused was made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the complainant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 01.11.2019 at 07.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.20/2019 u/s. 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. Sd/-xxxxxx (N.DEVANATHAN) DSP, V&AC, TVM.

1/11/19

Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
Tiruvannamalai.